DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 78/2020
Deposition of Witness for : PW 10

| Name. | திரு. கோதண்டம் |
|---|---|
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 14.03.2025

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28.5.2016 அன்று மதுராந்தகம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நான் நிலைய பொறுப்பில் இருந்தபொழுது 8.00 மணிக்குசூரக்குடடை பவர் ஸ்டேஷன் வேலு மகன் கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப்பெற்று அம்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.310/2016 பிரிவுகள் 294(பி), 324, 506(2) மற்றும் 307 இதச கீழ் **அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.** அதன் அசலை மதுராந்தகம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்புதான் டிஎஸ்.ஆர் தகவல் அனுப்பிவோம். புகாரில் கீழே உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரில்

உள்ள கையெழுத்தும் அதன் கீழ் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளன என்றால் சரிதான். என்னுடைய கையெழுத்தும், அதன் கீழ் உள்ள கையெழுத்தும் ஒரே மையினால் எழுதப்பட்டது என்றால் இல்லை. அ.த.சா.ஆ.1 புகார் காவல் நலையததில் வைத்து எழுதப்பட்டது என்றாலும், காவல் நிலையத்தில் எங்களால் அது தயாரிக்கப்ட்டது என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் எதிரிகளுடன் அனுப்பவில்லை. தனியாகத்தான் அனுப்பினேன்.

3) புகாரைப் பெற்று விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சொன்ன நேரம், சொன்ன நேரம் நான் புகார்தாரரிடமிருந்து புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. 27.05.2016 இரவு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்பபட்டது. ஆனால் முதல் தகவல் அறிக்கை மறுநாள் காலையில்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. இவ்வழக்கில் ஆய்வாளரைக் கேட்டு நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை.

மறுவிசாரணை –இல்லை.